**28th January 1969]**

**MR. CHAIRMAN**: May I take the sense of the **House** whether we shall meet from **4** p.m. to **7** p.m.?

The suggestion was agreed to.

IV.—CALLING ATTENTION TO REMISSION OF LAND TAX, FAMINE RELIEF MEASURES, ETC. IN RAMANATHAPURAM DISTRICT CONSEQUENT ON FAILURE OF MONSOON.

**திரு. வி. தங்கபாண்டியன்** : தலைவரவர்களே, பருவமழை பொய்த்ததன் விளைவாக இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவரித் தள்ளுபடி, பஞ்சத்துயர் தணிப்பு நடவடிக்கைகள் முதலிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் குறித்து மாண்புமிகு உணவு-வருவாய் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன்.

**THE HON. THIRU K. A. MATHIALAGAN**: Mr. Chairman, there was complete failure of monsoon in West Ramanathapuram district and the area has been affected by drought. The position in East Ramanathapuram district except Tiruppattur taluk and Karaikudi sub-taluk is also not satisfactory. The supply position in Vaigai remains precarious. The Collector of Ramanathapuram has undertaken a tour of the district. As the seasonal conditions are not satisfactory following the failure of timely rains, the Collector has submitted to the Board of Revenue the following proposals to start relief works in the affected areas with a view to helping people badly affected by drought conditions:—

1 Metalling improvement and formation of roads.

2 Desilting of supply channels.

3 Repairs to Minor Irrigation Tanks and other tanks.

4 Deepening of drinking water wells, and

5 Sinking of community wells.

In addition to the above relief works, remission of land revenue will be granted wherever necessary by the Local Officers. Orders on the proposals of the Collector will be issued on receipt of the Board's recommendations.

V.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—(*cont.*)

**MR. CHAIRMAN**: We shall now resume the discussion on the Governor's Address.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 3.20
மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உடல் நிலை விரைவில் குணமடைந்து அவர்கள் தமது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றும் வகையிலே அவர்களுடைய உடல் நலம் சீக்கிரமே வளம் பெற ஆண்டவன் அருள் புரியப் பிரார்த்திக்கிறேன்.

கவர்னர் அவர்களுடைய பேருரையிலே பல விஷயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் பருவமழை தவறிய காரணத்தினால் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருப்பதையொட்டி பஞ்ச நிவாரண வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் ஓரிரு மாவட்டங்